<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

| | |
|---|---|
| Case No. | : C. C. No. 18/2025 |
| Prosecution Witness | : P. W. 3 |

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலாஜி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 03/09/2025

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

நான் தற்போது செங்குன்றத்தில் வசித்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2ம் மாதம், 2024ம் வருடம், தேதி ஞாபகமில்லை. செங்காளம்மன் கோவில் அருகே சத்தம் கேட்டு அனைவரும் ஓடினார்கள். நானும் சென்று பார்த்தேன். பிரகாஷ் என்பவர் அவருடைய தொடையிலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. SVM Eicher வண்டி அவர் மீது ஏறி இறங்கியதாக கூறினார்கள். அந்த வண்டியின் ஓட்டுநர் ஆஜர் எதிரி ஆவார். அவரை பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் பாடியநல்லூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பின்பு அவர் வீட்டிலிருந்து எனக்கு போன் மூலமாக அவர் இறந்துவிட்டதாக தகவல் கூறினார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அனைவரும் ஓடிவந்த போது தான் என்ன நடந்தது என்று எனக்கு தெரிந்தது என்றால் சரிதான். போலிசார் சொன்னதால் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C. C. No. 18/2025**

**Prosecution Witness : P. W. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமதாஸ் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 03/09/2025

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது செம்புலிவரத்தில் வசித்து அங்கேயே விஜயலெட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் கடை நடத்தி வருகிறேன். நான் என்னுடைய கடையில் இருந்த போது திடீரென்று சத்தம் கேட்டது. நான் உள்ளே இருந்து வெளியே வந்து பார்த்த போது பிரகாஸ் என்பவர் மீது லாரி ஏறியிருந்தது. அவர் கத்திக் கொண்டிருந்தார். அவர் என்னைப் பார்த்து அப்பா வலிக்கிறது என்று கூறினார். நாங்கள் அங்கிருந்தவர்கள் எல்லாரும் சேர்ந்து அவர் மீதிருந்து நகர்த்தினோம். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் பாடியநல்லூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். ஆஜர் எதிரி தான் லாரி ஓட்டுநர் ஆவார். லாரியின் பதிவெண் எனக்கு தற்போது ஞாபகமில்லை. அந்த லாரி ஈச்சர் வகை லாரி ஆகும். பின்பு அவர் வீட்டிலிருந்து எனக்கு போன் மூலமாக அவர் இறந்துவிட்டதாக தகவல் கூறினார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். லாரி பழுதாகி சம்பவயிடத்திலேயே நின்று கொண்டிருந்தது என்றால், கீழே பழுதை சரி செய்து கொண்டிருந்த பிரகாஷ் எதிரியிடம் ஓட்ட சொல்லும் போது விபத்து ஏற்பட்டது. நான் பார்க்கும் போது லாரிக்கு அடியில் சிக்கியிருந்தார். பிரகாஷை எனக்கு பத்து வருடமாக பழக்கம் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

| | |
|---|---|
| Case No. | : C. C. No. 18/2025 |
| Prosecution Witness | : P. W. 1 |

| | | | |
|---|---|---|---|
| Name | : பார்த்திபன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 03/09/2025

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது அழிஞ்சிவாக்கத்தில் வசித்து சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 05.02.2024ம் தேதி மதியம் 12.30 மணியளவில் என் அண்ணன் பிரகாஷ் வேலைக்கு செல்லும் போது செங்காளம்மன் கோவில் பக்கத்தில் சாந்தி மெடிக்கல் எதிரே விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. நான் அங்கு சென்று பார்த்த போது, என் அண்ணன் மீது ஈச்சர் வண்டியின் முன்பக்க டயர் என் அண்ணனின் இடுப்பு பகுதியிலிருந்து கால் வரை ஏறி இறங்கியிருந்தது. பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் பாடியநல்லூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மேல் சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் அண்ணனிடம் அன்றிரவே போலிசார் வாக்குமூலம் பெற்றார்கள். அப்போது நான் உடனிருந்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என் அண்ணன் கொடுத்தது தான். புகாரி வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என் அண்ணனுடையது தான். **(அது அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 08.02.2024ம் தேதி காலை என் அண்ணன்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

இறந்துவிட்டதாக மருத்துவமனையில் தெரிவித்தார்கள். அது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் தகவல் அளித்தேன். லாரியின் பதிவெண் TN 18 AC 5901 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அண்ணன் பிரகாஷ் சொல்லி தான் விபத்து பற்றிய விவரங்கள் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால், விசாரணை செய்தார்கள். லாரிக்கு அடியில் கற்களை அடுக்கி அதனடியில் பழுது பார்த்து கொண்டிருந்த போது அந்த கற்கள் உடைந்து வேலை செய்து கொண்டிருந்த என் அண்ணன் மீது விழுந்துவிட்டதால் தான் அவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால், தெரியவில்லை. விபத்துக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA